முனைவர் பெ.சுமதி

மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில், ஒப்பிலக்கியத்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். ஆய்வியல் நிறைஞர் பட்டம் மற்றும் முனைவர் பட்டத்தை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். ஒப்பிலக்கியம், இக்கால இலக்கியம், சங்க இலக்கியம் தொடர்பாக எழுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். ஆறு புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவரது வழிகாட்டுதலில் நான்கு மாணவர்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். நான்கு மாணவர்கள் முனைவர்பட்ட ஆய்வை மேற்கொண்டு வருகின்றனர். முப்பது மாணவர்கள் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கை (கோட்பாட்டுப் பார்வையில் - தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களும் காளிதாசரின் படைப்புகளும்) நடத்தியுள்ளார். இந்நூல் இவரது ஏழாவது நூலாகும்.

பதிப்பகத்தார்.

SHANLAX PUBLICATIONS
www.shanlaxpublications.com
publisher@shanlaxpublications.com

செவ்வியல் படைப்புகளில் பன்முகப் பார்வை முனைவர் பெ.சுமதி

# செவ்வியல் படைப்புகளில் பன்முகப் பார்வை

முனைவர் பெ.சுமதி



## நூல் விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | 'செவ்வியல் படைப்புகளில் பன்முகப் பார்வை' |
| ஆசிரியர் | : | பெ. சுமதி |
| ISBN | : | 978-93-88398-79-4 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, மார்ச் 2019 |
| நூல் உரிமை | : | ஆசிரியர்க்கு |
| விலை | : | ₹ 225/- |
| நூல் அளவு | : | Demmy |
| பக்கங்கள் | : | x + 166=176 |
| வெளியீடு | : | சான்லாக்ஸ் பதிப்பகம் |
| பதிப்பகம் | : | சான்லாக்ஸ் பதிப்பகம்<br>61, T.P.K மெயின் ரோடு,<br>வசந்த நகர், மதுரை – 3. |




## முன்னுரை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின் அகவாழ்வியலையும், புற வாழ்வியலையும் நேர்த்தியாகக் கட்டமைப்பது செவ்வியல் இலக்கியங்களாகும். செவ்வியல் என்றால் செம்மை என்று பொருள் விளக்கம் தரப்படுகின்றது. மக்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவற்றை செம்மையாக எடுத்துரைப்பது செவ்வியல் இலக்கியம் என்றால் மிகையாகாது. சங்க இலக்கியம் 'மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்/ சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்' என்ற அமைப்பில் உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடிய வகையில் வாழ்வியல் நெறிகளை எடுத்துரைக்கும் சிறப்பு பெற்றவையாகும்.

சங்க இலக்கியத்தில் சமயம் பற்றிய கருத்துக்கள் வெளிப்படையாக இல்லை என்று கூறப்பட்டாலும் பரிபாடல், திருமுருகாற்றுப்படையில் முருக வழிபாடு போற்றப்படுகின்றது. மனிதன் தொடக்கக் காலத்தில் இயற்கை வழிபட்டு அதற்கு முருகு என்று பெயர் வைத்து காலப் போக்கில் அதற்கு உருவங்கொடுத்து முருகன் என்ற தமிழ்க் கடவுளைப் படைத்து அதை குறிஞ்சி நிலத்திற்குரிய தெய்வமாக்குகின்றான். திருமுருகாற்றுப்படை ஆற்றுப்படுத்தப்படுபவன் பெயரால் அழைக்கப்படாமல் புலவராற்றுப்படை என்று அழைக்கப்படுவதால் காலத்தால் பிற்பட்டது என்று கூறப்படுகின்றது. புலவரை ஆற்றுப்படுத்தும் பழக்கம் கி.பி.11ஆம் நூற்றாண்டு நூலான புறப்பொருள் வெண்பாமாலையில் முதன் முதலில் கூறப்பட்டுள்ளது என்பதால் திருமுருகாற்றுப்படை காலத்தால் பிற்பட்டது என்ற கருத்து பதிவு செய்யப்படுகின்றது. பரிபாடல், திருமுருகாற்றுப்படையில் முருகனை போற்றி வணங்கிய மக்களின் செயல் முருகன் மக்களுக்கு அருளிய திறன் விளக்கப்பட்டுள்ளன.

குறிஞ்சி நில மக்களாகிய குறவர்கள் மூங்கில் அரிசியை உணவாகப் பயன்படுத்தினார்கள் என்பதிலிருந்து